RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22363

OPEN ACCESS

# புவியரசு கவிதைகளில் பெண்ணியம்

க. செல்வராஜ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம், நாமக்கல்-637401, தமிழ்நாடு, இந்தியா

# Feminism in Puviyarasu Poems

K. Selvaraj [a, *]

[a] Department of Tamil, Thiruvalluvar Government Arts College, Rasipuram, Namakkal-637401, Tamil Nadu, India

* Corresponding Author: ragamugil@gmail.com

Received: 28-04-2022
Revised: 27-06-2022
Accepted: 10-07-2022
Published: 30-07-2022

**ABSTRACT**

Among the various evolutions of Tamil literature, poetry is one. This art form has undergone many transformations from ancient times to the present day. It has expanded its boundaries through forms such as classical poetry, modern poetry, haiku, and senryu. The poets of the Sangam age mostly offered their works to the Tamil world in poetic style. They searched for words within the limits of grammar, beautifully arranged them, and thereby gained distinction. Since this society has always embraced change, it also expected transformation in the form of classical poetry. Every change in any field is an expression of that field's growth. The development that followed classical poetry took shape as verse poetry. After evolving into verse poetry, it flourished as modern poetry. In that context, poet Puviyarasu is notable among modern poets. His poems about women are highlighted as the foundation of this research article.

**Keywords:** Poet Puviyarasu, Sangam age, Classical poetry, Poetic Style.

## முன்னுரை

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பரிணாமங்களுள் கவிதைக் கலையும் ஒன்று. இக்கவிதை, ஆரம்ப காலங்களில் இருந்து இன்று வரை பல நிலைகளில் மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ, சென்ரியூ போன்ற நிலைகளில் தன்னுடைய எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டே வந்துள்ளது. சங்ககாலப் புலவர்கள் தமது படைப்புகளைப் பெரும்பாலும் கவிதை நடையிலேயே தமிழுலகத்திற்குக் கொடுத்துள்ளனர். இலக்கண வரம்பிற்குட்பட்டு வார்த்தைகளைத் தேடித் தேடி, அழகாகக் கோர்த்து அதன்மூலம் பெருமையும் பெற்றனர். மாற்றங்களையே வழக்கமாகக் கொண்டுள்ள இச்சமுதாயம் மரபுக் கவிதையின் வடிவத்திலிருந்தும் மாற்றத்தை எதிர்பார்த்தது. ஒவ்வொரு துறையிலும் நிகழும் மாற்றங்கள் அனைத்தும் அத்துறை சார்ந்த வளர்ச்சியின் வெளிப்பாடுகளே ஆகும். மரபுக்கவிதைக்கு அடுத்தபடியான வளர்ச்சி வசன கவிதையாக அமைந்தது. வசன கவிதையாக உருமாறிய பின்னர் புதுக்கவிதையாகப் பொலிக பெற்றது. அந்தவகையில் புதுக்கவிதை எழுத்தாளர்களில் கவிஞர் புவியரசு குறிப்பிடத்தக்கவர். அவர் எழுதிய மகளிர் குறித்தான கவிதைகள் இவ்வாய்வு கட்டுரையின் தளங்களாக குறிக்கப்படுகிறது.

## புவியரசு கவிதைகளில் மகளிர் சிக்கல்கள்

பெண்களின் உயர்வுக்கான முதல் இடம் குடும்பம். குடும்பத்திலிருந்து பெண்களின் நிலை உயர்ந்தால் தான் சமுதாயத்தில் உயர முடியும். ஆண்களும் பெண்களும் பொதுவான, நேர்மையான, சமத்துவத்துடன் சகோதரத்துடனும் கூடிய சமுதாயம் உருவாக வேண்டுமென்றால் அது குடும்பத்திலிருந்து தொடங்குதல் அவசியம். குடும்பத்தாலும் சமுதாயத்தாலும் கொடுக்கப்படும் பொறுமைசாலி, தியாகி, குடும்ப விளக்கு, குலக்கொடி போன்ற பட்டங்களிலிருந்து பெண்கள் விடுபட

வேண்டுமென பெண்ணுரிமைச் சிந்தனையாளர்கள் விரும்புகின்றனர். பெண்ணுரிமை என்பது ஒட்டு மொத்த சமுதாய உரிமையை நோக்கி இயங்குவதையே குறிக்கோளாகக் கொண்டது என்பதை,

“எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமைஎலாம்

எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே

எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக

வில்லார்க்கும் நல்ல நுதல் மாதர் எல்லார்க்கும்

விடுதலையாம் என்றெ மணிமுரசம் ஆர்ப்பீரே”1

என்னும் பாரதிதாசனாரின் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. அனைத்து உரிமைகளும் அனைவருக்கானது என்னும் நோக்கில் பெண்களுக்கு நீதி கிடைக்க, பெண்களின் சிக்கல்களுக்குத் தீர்வு கிடைக்கப் போராடியவர்கள் பலர். பெண்களுக்கு எதிராக நடைபெறும் சமுதாய அவலங்களை எதிர்ப்பது பெண்களுக்கான சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது இக்காலகட்டத்தில் அவசியமாகிறது.

சமுதாயத்தில் நடந்து வரும் வரதட்சணைக் கொடுமை, ஆண், பெண் ஏற்றத்தாழ்வு, பெண் சிசுக்கொலை, பாலியல் கொடுமைகள், குடும்ப உறவுகளினால் ஏற்படும் தொல்லைகள் போன்று பெண்களுக்கு இழைக்கப்படும் பிற அநீதிகளை தங்கள் கவிதையின் வழி வெளிக்கொணர்ந்தவர்கள் கொங்கு வட்டாரப் படைப்பாளர்கள். பெண்களுக்கான உரிமையை முன்னெடுத்துச் செல்லும் கருவியாக நவீன இலக்கியங்கள் அமைந்தன. சமுதாயத்தில் நிலவும் பல்வேறு சூழ்நிலைகளைச் சித்தரித்து. அதன் மூலம் பெண்களுக்கு விழிப்புணர்வூட்டி எழுச்சி கொள்ளச் செய்த இலக்கியங்களில் கவிதை இலக்கியம் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, புதுக்கவிதை இலக்கியவாதிகள் பெண்மையைப் பாடுபொருளாக வைத்து பல்வேறு காலங்களில், பல நிலைகளில் பெண்களுக்கான சிக்கல்களை இச்சமுதாயத்தின் பார்வைக்கு வைத்துள்ளனர். சமுதாயத்தின் அனைத்துப் படிநிலைகளிலும் பெண் என்பவள் தனக்கான விடுதலையைத் தேட வேண்டும். தனக்கு எதிராக இருக்கும் தடைகளை உடைக்க வேண்டும் என்ற எண்ணம் தற்கால பெண்களின் மனதில் ஆழப்பதிந்துவிட்டது. அதற்கேற்றாற் போல் தற்காலப் படைப்பாளர்களும் பெண்களுக்குரிய சிக்கல்களை மையமிட்டு தங்கள் படைப்புகளைப் படைக்கத் தொடங்கினர். அதன் விளைவாக அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குண்டான அடக்கு முறைகள் ஓரளவிற்குக் குறையத் தொடங்கின எனலாம். பாரதி தொடங்கி, தற்காலக் கவிஞர்கள் வரையில் பலர் பெண்களுக்கான படைப்புகளைப் படைத்துள்ளார்.

திருமணம் என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் மறக்க முடியாத ஓர் அனுபவம் இந்த அனுபவத்தில் சிக்குண்டு தவிப்பவரும் உண்டு. சிக்காமல் தவிப்பவரும் உண்டு. திருமண பருவம் எய்தியும் மணமாகாமல் இருக்கும் பெண்களை முதிர்கன்னி என்பர். இப்படிப்பட்டவர்கள் தனக்கு மணமாகவில்லையே என ஏங்கித் தவிப்பர். தன்னை ஒத்த பெண்கள் குடும்பத்தோடும் குழந்தைகளோடும் கொஞ்சி மகிழுகையில் நமக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லையே என வருத்தப்படுவர். தன்னையே நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை,

“அவள்

முப்பத்தி ரெண்டாகியும்

கட்டப்படாத தாலி கழுத்தைத்

தடவியபடி

தன்னை சபித்த படி

தணலில் வெந்த படி

ஆற்று நீரில்”2

என்ற கவிதையின் மூலம் வெளிப்படுத்துகிறார். மணமாகாத பெண்ணின் மனப்போராட்டங்கள் இதன் மூலம் தெரிய வருகிறது. முதிர் கன்னியைப் பற்றி கவிஞர் மேத்தா கூறும்பொழுது,

“பூக்களிலே நானுமொரு

பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்

பூவாகப் பிறந்தாலும்

பொன் விரல்கள் தீண்டலையே!

பொன் விரல்கள் தீண்டலையே! - நான்

பூமாலை ஆகலையே”3

என்று பாடுகிறார். பிறருக்குக் கிடைத்தத் திருமண வாய்ப்பு, வயது முப்பத்திரண்டு ஆகியும் நமக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தினால் தன்னுடைய கழுத்தைத் தடவிப் பார்க்கிறாள். உடல் சூட்டை தணித்து மனதை தேற்றிக்கொள்வதற்காக ஆற்று நீரில் நிற்கிறாள். அதுவும் தன்னுடைய நிலையை சபித்தவாரே என்று கூறுவதன் மூலம் பெண்களுக்கான திருமணம் தள்ளிப்போவதற்கு வரதட்சணை, நிறம், பொருளாதாரம் போன்ற தடைகள் சமுதாயத்தில் இருப்பதைப் புவியரசு கவிதையின் வாயிலாக உணர முடிகிறது.

ஆண், பெண் இருவருக்குமான ஒழுக்க நெறிகளைக் கண்ணுற்ற பாரதி 'கற்பு என்பதைப் பொதுவில்' வைப்போம் என்கிறார். ஆனால் பெரும்பாலான இலக்கியங்களில் கற்பு நிலைகளில் ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் நிலை காணப்படுகின்றது. கம்பராமாயண ராமன் தன்னுடைய குல மேன்மையைக் காப்பதற்காக மனைவியாகிய சீதையைப் பரிசோதித்துப் பார்த்தான். அவனைப் போலவே மனைவியைச் சந்தேகிப்பவர்கள் இருக்கும் வரையில் பெண்களுக்கு எதிரான நிலைப்பாடு இருக்கும் என்பதை,

"குலப்பெருமை காக்கும்

சந்தேக ராமன்கள் இருக்கும் வரைக்கும்

கற்புச்சோதனை நடக்கவே செய்யும்"4

என்கிறார் கவிஞர். கணவன் இறந்துவிட்டால் மனைவி உடன்கட்டை ஏற வேண்டும் என்ற நிலை, கற்புள்ளவள் என்பதை நிரூபிக்க அக்னி பரிட்சை போன்ற நிலை இது போன்று பல சோதனைகள் பெண்களுக்கு மட்டுமே அக்காலத்தில் இருந்து வந்துள்ளது. ஆண்களுக்கு அதுபோன்ற இருந்ததில்லை. அதனாலேயே ஆண்களின் கட்டாயத்திற்குப் பெண்கள் ஆளாக வேண்டிய நிலை இருந்தது. "சங்க இலக்கியங்களில் இற்பரத்தை, சேரிப்பரத்தை, காமக்கிழத்தி, காதற்பரத்தை போன்ற பெண்மக்கள் ஆண்களை மகிழ்விக்கவே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது" சமுதாயத்தில் உருவாக்கப்பட்ட கருத்துருவிற்கு ஏற்ப பெண் நடந்து கொள்ள வேண்டும் என்னும் நிலை காலங்காலமாக இருந்து வருவதையே இது காட்டுகிறது. அதன்வழி மனைவியை சந்தேகிக்கும் கணவன்மார்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதைப் புவியரசு கவிதை வெளிக்காட்டுகிறது.

பெண் உரிமைக்கு எதிரான கருத்துக்களைக் கூறுவோரை எதிர்த்துப் போராடப் பெண்கள் தயங்கக் கூடாது. நமக்காக மற்றவர்கள் போராடுவதற்கு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு பெண்களிடையே இருக்கக்கூடாது. பசித்தவர்கள்தான் புசிக்க முடியும். வலியுள்ளவர்தான் மருந்து தேட வேண்டும். அதுபோல, பெண்கள் பிறரை எதிர்பார்க்காமல் ஒன்று சேர வேண்டும். விருப்பப்பட்டு இணைபவர்கள் போராட்டத்தில் பங்கு எடுக்கட்டும். தன் கணவனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் தானே எதிர்க்கத் துணிந்த கண்ணகியைப் போல பெண்களும் துணிய வேண்டும் என்பதை,

"மாதர் தம்மை இழிவு செய்யும்

மடமையை கொளுத்துவோம்

யார் கொளுத்துவது

கொளுத்திட ஒருவன்

வருகிற வரைக்கும்

நீ

அடுப்பைக் கொளுத்து

கண்ணகி போல

அநீதியை கொளுத்த

உன்னால் முடியுமோ"5

என்ற கவிதையில், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக விளங்க வேண்டும் என்று பெண்களுக்கு அழைப்பு விடுப்பதைப் புவியரசு கவிதையின் வாயிலாக உணர முடிகிறது.

தமிழ்ச் சமுதாயத்தில் மக்கள் கணவனை உயர்த்திச் சொல்வதற்காகக் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்றும் கணவனே கண்கண்ட தெய்வம் என்றும் கண் அவன் கணவன் என்னும் மதிப்பீடுகளை உருவாக்கியுள்ளனர்.

பெண்ணானவள் தன்னுடைய கணவனை தெய்வத்திற்கு நிகராக மதிப்பாள் என்றும் தெய்வத்தைத் தொழாதவள் கூட கணவனைத் தெய்வமாகத் தொழுவாள் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது. கடவுளும் கணவனும் ஒன்றுதான் என்பதற்குப் புவியரசு தரும் காரணம்,

"கணவனும் தெய்வமும் ஒன்று தான்
கல் வடிவம்
கரம் பிடித்த நாள் தொட்டுக்
கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சிக்கிறேன்!
என் கடவுள்
கரையவில்லையே!
நான்தான் கரைந்துவிட்டேன்
கரைந்து கரைந்து
உருகி உருகி
பின்
இறுகி இறுகிக்
கல்லானேன்!"6

என்று எழுதுகிறார். கணவனும் கல், கடவுளும் கல் இருவருமே எனக்காக இணங்கவில்லை. இரங்கவில்லை. அவர்களுக்காக கண்ணீர் சிந்தி கரைந்துவிட்டேன். கரைந்து, உருகி இறுதியில் மனம் மறுத்துப்போய் இறுகி கல்லாய் கணத்துடக்கிடக்கிறேன் என்று கூறுவதன் மூலம் பெண்ணின் துயர்துடைக்க கணவனும் உதவவில்லை, கடவுளும் உதவவில்லை என்பதை 'இதுதான்' என்னும் நூலில் கவிஞர் கூறியிருப்பதை உணர முடிகிறது.

இலக்கியங்களில் ஆடவரால் வஞ்சிக்கப்பட்ட பெண்கள் பலர். கோவலனால் பாதிக்கப்பட்ட கண்ணகி, மாதவி ராமனால் பரிசோதனைக்குள்ளான சீதை, தருமனால் பணயம் வைக்கப்பட்ட பாஞ்சாலி, பீஷ்மரால் பாதிக்கப்பட்ட குந்தி, காந்தாரி, அம்பை இதுபோன்று பெண்களை வஞ்சிக்கும் நிலை புராண, இதிகாச காலம்தொட்டு இன்று வரை தொடர்ந்து வருகிறது. இச்சமுதாயத்தில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள பெண்கள் பல்வேறு சோதனைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. இக்கருத்தை மொழியுங்கால்,

"இந்திரக் காதலால் கைவிடப்பட்டு
கௌதம வறுமையால் சபிக்கப்பட்ட
அகலிகைகளின் அக்னிப் பிரவேசம்
தினமும் எங்கள் தெருவில்"7

என்ற கவிதையில் இந்திரன், கௌதமன் என்ற இருவரால் பாதிக்கப்பட்ட அகலிகை கல்லாய்க் கிடக்க வேண்டி இருந்ததை இக்காலக் கவிதை எடுத்துக்காட்டுகின்றன. இலக்கியத் தலைவியர்கள் தங்களைத் தூய்மையானவர்கள் என்று நிரூபிக்க எவ்வாறு போராடினார்களோ அது போன்று தற்காலத்திலும் தங்களைத் தூய்மையுள்ளவர்களாக, வலிமையுள்ளவர்களாக, திறமையுள்ளவர்களாக காட்டிக் கொள்ள பாரதப் பெண்கள் போராடி வருகிறார்கள் என்பதை 'இதுதான்' என்னும் நூலின் வழி சுட்டுகிறார் கவிஞர்.

## References

Bharathidhasan, Bharathidhasan kavithaikal, Meyyapan Pathipagam, Chennai, Inida

Puviarasu, Oru Mukkiya Arivuppu, Vijaya Pathipagam, Coimbatore, India

Puviarasu, Edhuthan, New Century Book House, Chennai, India

Metha, Kanneer Pookal, Thirumagal Nilayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License